**ஆகஸ்ட் - 16**

**"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்." - 1 தெச 5 : 18.**

கர்த்தரோடு ஐக்கியத்திலுள்ளதும், அவருடைய சித்தத்தைச் செய்ய முற்றிலுமாக அர்ப்பணம் செய்திருக்கிறதுமான இருதயத்தைப் பெற்றிருக்கிற கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொரு நாள் துவக்கத்திலும் அவருடைய ஆசிர்வாதத்திற்காக மன்றாடிக் கேட்பதும், ஒவ்வொரு நாள் முடிவிலும் தங்களுடைய நன்றிகளைத் தெரிவிப்பது மட்டுமல்லாமல், ஜீவியத்தின் எல்லாக் காரியங்களிலும் தாங்கள் தங்களுடைய எல்லாவற்றையும் கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்திருக்கிறோம் என்பதை நினைக்க நாடுகிறார்கள். மேலும், விசுவாசத்தினாலே ஜீவியத்தின் எல்லாக் காரியங்களுக்கும் அவரையே சார்ந்திருக்கிறார்கள். மேலும் தங்களுடைய அலுவல்களின் முக்கியத்துவத்துக்கு சமமாக அவர்கள் விசுவாசத்தினாலே ஜீவியத்தின் எல்லா சிரத்தையோடும் தெய்வீக பராமரிப்பின் சவகாசத்தைப் பெற்று ஏற்றவாறு நன்றி சொல்லுகிறார்கள். நமக்காக இதுதான் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அவருடைய சித்தத்திற்காகவும், அவருடைய ஆசிர்வாதத்திற்காகவும் இடையேறாத மதிப்பைக் கொண்ட ஒரு மனப்பாங்கில் நாம் வசிக்க அவர் சித்தம் கொள்ளுகிறார். நாம் சம்பந்தமாக அவர் அதை விரும்புகிறார். ஏனென்றால், இடுக்கமான வழியில் நம்முடைய முன்னேற்றத்திற்கு அது மிகவும் அனுகூலமான நிலைமை இருக்கும். நமது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் நிச்சயம் பண்ணுவதில் அது நமக்கு சிறந்த உதவி செய்யும்.

**- Z '03, 25(R 3135)**

மேன்மையான குணத்தையுடைய மனிதன், பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காகக் காண்பிக்கிற நன்றியின் தகுதியை அறிகிறான். இருந்தாலும், அடிக்கடி நமது குறிகிய நோக்கின் காரணமாக நம்முடைய பொருந்தாத அனுபவங்கள் உலகப்பிரகாரமான பிரதிகூலங்களை உண்டாக்கினாலும், அவைகள் நமக்குப் பெரிய ஆவிக்குரிய ஆசிர்வாதங்களுக்கான கருவிகள் என்கிற உண்மையை அசட்டை செய்வதினால் அவைகளுக்கான நன்றி செலுத்தத் தவறுகிறோம். இவைகளும் பொருத்தமான அனுகூலங்களும் கர்த்தருக்கு நன்றி செலுத்த நம்மை அழைத்துக் கொண்டிருக்கிற ஆசிர்வாதங்களுக்காகக் கருதப்பட வேண்டும். தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது. ஆகையால், கடினமானவைகளும், சுகமானவைகளும், சந்தோஷம் நிறைந்தவைகளும், துக்கம் நிறைந்தவைகளும், பொருந்தக்கூடியதும் பொருந்தக்கூடாததுமான எல்லாக் காரியங்களுக்காகவும் நன்றி செலுத்துவோமாக. இவைகள் எல்லாம் நமது அருமை பிதாவிடமிருந்து வருகிற அன்பின் கடிதங்களும், அடையாளங்களாகவும் ஞாபகக் குறிகளாகவும் இருக்கிறதோடு, இவைகளின் உத்தேசம் நமக்கு மிகவும் சரியான மிகவும் உயர்ந்த நன்மையை நம்மில் நடப்பிப்பதுமாயிருக்கிறது. **- P '34, 110.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**எபே 5:20; கொலோ 1:13; 2:7; 3:15-17; 4:2; சங் 50:14,15; 105:1,6; 106:1;107:1,2,16,22; யோவே 2:26; பிலி 4:6; 1தீமோ 2:1; 4:3,4; எபி 13:15.**

**கோபுர வாசிப்பு : Z '02, 12 (R 2935)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் எல்லாவற்றிலேயும் நன்றியுள்ளவனாய் இருந்தேனா? எப்படி? ஏன்? பயன்கள் எவை?**